# இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டு அமைச்சு

## தேசிய இளைஞர் படையணி

# வெற்றிடங்கள்

தேசிய இளைஞர் படையணியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. உதவிப் பணிப்பாளர் (பயிற்சி) (MM 1-1) – (வெற்றிடம் - 01)**

**02. ஆலோசகர் (தகவல் தொழில்நுட்பம்) (MM 1-1) – (வெற்றிடம் - 17)**

**03. ஆலோசகர் (ஆங்கிலம்) (MM 1-1) – (வெற்றிடம் - 15)**

இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புக்கு உரித்தாகும்.

**04. உதவிப் பணிப்பாளர் (மாகாணம்) (MM 1-1 Fixed) – (வெற்றிடம் - 05)**

**05. நிலைய பொறுப்பதிகாரி (JM 1-1 Fixed) – (வெற்றிடம் - 17)**

பிரத்தியேக பயிற்சி நிலையம்
அழகியல் பயிற்சி பாடசாலை
விளையாட்டு பயிற்சி பாடசாலை
தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம்

மேலுள்ள (4) மற்றும் (05) பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்படுவர்.

இந்தப் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும்,

a. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
b. பதவிக்கு வழங்கப்படும் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு மற்றும் நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணிபுரிவதற்கு தேவையான உடல் மற்றும் உள தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்.
c. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

### 01. உதவிப் பணிப்பாளர் (பயிற்சி) (MM 1-1) – தலைமை அலுவலகத்திற்கு

**கல்வித் தகைமை :** வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

1. வர்த்தக முகாமைத்துவம் (சிறப்பு), வர்த்தக நிர்வாக மனித வள முகாமைத்துவம், B.Sc முகாமைத்துவம் (அரச) சிறப்பு, வணிகம் (சிறப்பு), B.Sc மனிதவள முகாமைத்துவம் (சிறப்பு), வர்த்தக முகாமைத்துவம் (மனிதவள) சிறப்பு, வர்த்தக நிர்வாகம் (மனிதவள முகாமைத்துவம்) சிறப்பு, B.Sc (வர்த்தக முகாமைத்துவம்) சிறப்பு, சட்டம், தொழிலாளர் கல்வியியல், B.Sc முகாமைத்துவம் (அரச), வர்த்தகம் (பொது), தத்துவமாணி (கௌரவ) ஆகிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

மற்றும்

பட்டத்தைப் பெற்ற பின் பயிற்சி பெற்ற துறையில் குறைந்தது இரண்டு (02) ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருத்தல்

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2 தகைமை)**

1. மேலுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.
2. கனிஷ்ட முகாமைத்துவ சேவை பிரிவில் குறித்த துறையின் பதவி ஒன்றில் குறைந்தது (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவை காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது :** 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

**சம்பள முறை :** MM 1-1-01/2025: ரூபா (91,690 – 10x2,480 – 15x3,450 = 168,240) இதுதவிர அரசின் மற்ற அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.

### 02. ஆலோசகர் (தகவல் தொழில்நுட்பம்) (MM 1-1)

**கல்வித் தகைமை :** வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

a. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்
 i. சிங்களம்/ தமிழ்
 ii. கணிதம்

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

b. கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் குறைந்தது மூன்று (03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

c. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம் ஒன்றில் இருந்து ஓர் ஆண்டுக்குக் குறையாத தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை ஒன்றில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

d. அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் தகவல் தொழில்நுட்ப துறையில் கற்பித்தல் தொடர்பில் (06) மாதங்களுக்கு குறையாத அனுபவம் ஒன்றை பெற்றிருத்தல்.

**குறிப்பு:** தகவல் தொழில்நுட்ப பாடம் ஒன்றுடன் பட்டம் ஒன்றை பெற்றவர்களுக்கு (a), (b), (c) மற்றும் (d) தகைமைகள் தேவையில்லை.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

a. ஆரம்பத் தரம் - தேர்ச்சி அற்ற, பகுதி தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி சேவை மட்டங்களில் கீழுள்ள (b), (c), (d) மற்றும் (e) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உள்ள பணியாளர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

b. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்
 i. சிங்களம்/ தமிழ்
 ii. கணிதம்

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

c. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது தேசிய கல்வி நிறுவனம் ஒன்றில் ஓர் ஆண்டுக்கு குறையாத தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை ஒன்றில் சித்தி பெற்றிருத்தல்.

d. சேவையில் நிரந்தர நியமனம் வகிக்க வேண்டும் என்பதோடு அந்த நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

e. குறித்த திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனத்திற்கு உட்பட்டவர்களில் (05) ஆண்டுகள் தொடர்ச்சியாக திருப்திகரமான சேவை காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது :** விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**சம்பள முறை :** MA 1-1 2025: ரூபா 46,220-10x540-7x630-4x890-20x1,190 = ரூபா 83,390 இதுதவிர அரசின் மற்ற அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.

### 03. ஆலோசகர் (ஆங்கிலம்) (MM 1-1)

**கல்வித் தகைமை :** வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

a. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்
 iii. சிங்களம்/ தமிழ்
 iv. கணிதம்

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

b. கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் குறைந்தது மூன்று (03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

c. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம் ஒன்றில் இருந்து ஓர் ஆண்டுக்குக் குறையாத ஆங்கில மொழி டிப்ளோமா கற்கை ஒன்றில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

d. அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் ஆங்கில மொழி துறையில் கற்பித்தல் தொடர்பில் (06) மாதங்களுக்கு குறையாத அனுபவம் ஒன்றை பெற்றிருத்தல்.

**குறிப்பு :** ஆங்கில மொழி பாடம் ஒன்றுடன் பட்டம் ஒன்றை பெற்றவர்களுக்கு (a), (b), (c) மற்றும் (d) தகைமைகள் தேவையில்லை.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

c. ஆரம்பத் தரம் - தேர்ச்சி அற்ற, பகுதி தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி சேவை மட்டங்களில் கீழுள்ள (b), (c), (d) மற்றும் (e) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உள்ள பணியாளர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

d. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்
 i. சிங்களம்/ தமிழ்
 ii. கணிதம்

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

c. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது தேசிய கல்வி நிறுவனம் ஒன்றில் ஓர் ஆண்டுக்கு குறையாத ஆங்கில மொழி டிப்ளோமா கற்கை ஒன்றில் சித்தி பெற்றிருத்தல்.

d. சேவையில் நிரந்தர நியமனம் வகிக்க வேண்டும் என்பதோடு அந்த நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

e. குறித்த திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனத்திற்கு உட்பட்டவர்களில் 05 ஆண்டுகள் தொடர்ச்சியாக திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது :** விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**சம்பள முறை :** MA 1-1 2025: ரூபா 46,220-10x540-7x630-4x890-20x1,190 = ரூபா 83,390 இதுதவிர அரசின் மற்ற அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.

**▪ ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படும் பதவிகள்**

### 04. உதவிப் பணிப்பாளர் (மாகாணம்) (MM 1-1 Fixed)

**நியமன பண்பு :** இந்தப் பதவிக்காக வெறும் 03 ஆண்டு அதிகபட்ச காலத்திற்கு உட்பட்டு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படும். நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்படாததோடு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு பதவி வகிப்பவருக்கு உரித்தாகும்.

**தகைமைகள் :**

1. சாதாரண பட்டப்படிப்புடன் இலங்கை இராணுவப் படையில் மேஜர் பதவிக்கு அல்லது விமான/ கடற்படையின் அதற்குக் குறையாத பதவி ஒன்றில் குறைந்தது 03 ஆண்டுகள் சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

2. இலங்கை இராணுவப் படை லெப்டினன்ட் கேர்ணல் பதவிக்கு அல்லது அந்தப் பதவிக்குக் குறையாத கடற்படை/ விமானப் படை பதவி ஒன்றில் 05 ஆண்டுகள் பணிக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

3. நாடளாவிய சேவை ஒன்றில் ஆட்சேர்ப்புத் தரத்தில் 05 ஆண்டுகள் சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

4. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட பட்டம் ஒன்றுடன் அரச அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ தரத்தில் 05 ஆண்டுகள் அனுபவம்.

**வயது :** நியமிக்கப்படும் திகதிக்கு 50 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

**சம்பள முறை :** MM 1-1-01/2025: ரூபா 71,730/- மாதாந்தம் ஆரம்ப நிலையான ஊதியம் ஒன்று பதவிக்கு உரித்தாகும். அதேபோன்று நீங்கள் ஓய்வு பெற்றவராயின் உங்களுக்கு உரித்தாவது வாழ்க்கைச் செலவு கொடுப்பனவில் பாதி அளவு மாத்திரமாகும்.

### 05. நிலைய பொறுப்பதிகாரி (JM 1-1 Fixed)

**கல்வித் தகைமை :** கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சைக்கு உட்பட்டவர்களில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அனுபவம் :** இலங்கை இராணுவப் படையின் மேஜர் பதவி ஒன்று அல்லது அதற்குக் குறையாத முப்படைகளின் பதவி ஒன்றில் 03 ஆண்டுகளுக்குக் குறையாத சேவை காலம் ஒன்றுடன் முறையாக ஓய்வு பெற்ற அல்லது முறையான வகையில் இராஜினாமா செய்திருத்தல் வேண்டும்.

**வயது :** விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு 50 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

**சம்பள முறை :** MM 1-1-01/2025: ரூபா 58,615/- மாதாந்தம் ஆரம்ப நிலையான ஊதியம் ஒன்று பதவிக்கு உரித்தாகும். அதேபோன்று நீங்கள் ஓய்வு பெற்றவராயின் உங்களுக்கு உரித்தாவது வாழ்க்கைச் செலவு கொடுப்பனவில் பாதி அளவு மாத்திரமாகும். இது தவிர அரசு அங்கீகரித்த மற்ற கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

இந்தப் பதவிகளுக்காக விண்ணப்பிப்பவர்கள் பொருத்தமான மாதிரி ஒன்றுக்கு அமைய விண்ணப்பப் படிவத்தை தயாரித்து விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு குறித்த சான்றிதழ்களின் நிழல் பிரதியுடன் 2025.06.17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது vacancy@youthcorps.lk என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

முழுமை பெறாத, குறித்த தகைமைகளை பூர்த்தி செய்யாத மற்றும் தாமதித்து கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர்,**
**தேசிய இளைஞர் படையணி தலைமையகம்,**
**இலக்கம் 420, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு 07.**

**பணிப்பாளர்**
**தேசிய இளைஞர் படைனி**
**2025.06.03**